بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/11/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝٢ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝٣ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝٤ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝٥ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝٦ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝٧

தபூக் பயணம் தொடர்பாக கிடைத்த கூடுதல் விவரங்களை இன்று எடுத்துரைப்பேன். ஏற்கனவே கடந்த குத்பாக்களில் எடுத்துரைக்கப்பட்டது போல, சில நயவஞ்சகர்கள் போருக்குச் செல்ல மறுத்து பல்வேறு சாக்குப்போக்குகளைக் கூறியிருந்தனர். ஆனால் **(ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்...., அவர்கள்) மதீனா திரும்பிய பிறகும் நயவஞ்சகர்கள் அன்னாருடன் பயணம் மேற்கொள்ளாததற்குக் கூறிய சாக்குப்போக்குகள் பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.** திருக்குர்ஆனிலும் இது பற்றிய குறிப்பு உள்ளது.

பயணத்திலிருந்து மதீனா திரும்பும்போது முதலில் பள்ளிவாசலுக்குச் சென்று இரண்டு ரக்அத் தொழுவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையாக இருந்தது. அதன்படி, நஃபில் தொழுகையை முடித்த பிறகு அன்னார் பள்ளிவாசலிலேயே அமர்ந்தார்கள். மக்கள் அன்னாரைச் சந்திக்கவும் அன்னாரைக் காணவும் வரத் தொடங்கினார்கள். அதேபோல், ஈமானிய பலவீனம் மற்றும் நயவஞ்சகத்தின் காரணமாகப் போருக்குச் செல்லாதவர்களும் வரத் தொடங்கினார்கள். இவர்கள் ஏறக்குறைய எண்பது பேர் இருந்தனர் என்று வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளார்கள். ஆனால் சில அறிவிப்புகளின்படி இதைவிடவும் அதிகமானவர்கள் என்று தெரிய வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களின் வெளிப்படையான காரணங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களிடம் பைஅத் வாங்கினார்கள்; அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கோரி துஆச் செய்தார்கள்; அவர்களின் உள்நோக்கத்தை அல்லாஹ்விடம் ஒப்படைத்தார்கள்.

ஆனால், இந்த நயவஞ்சகர்களின் இக்குற்றம் மன்னிக்க முடியாததாக இருந்தது. எனவே, அல்லாஹ் வஹீ மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு, 'இவர்கள் அசுத்தமானவர்கள்; இனி இறைவன் இவர்களிடம் ஒருபோதும் திருப்தியடைய மாட்டான்' என்று கூறிவிட்டான். இவர்களைக் குறித்து அல்லாஹ் சூரா தவ்பாவில் கூறியுள்ளான்.

தபூக் போரில் பின்தங்கியவர்கள் மீது அல்லாஹ் தனது கடும் கோபத்தை வெளிப்படுத்தினான்; இவர்கள் கட்டுப்படாதவர்கள் என்று அறிவித்தான்; இவர்களுக்காக ஜனாஸா தொழுகை நடத்துவதற்கும், இவர்களது கப்ருக்கு சென்று துஆ செய்வதற்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தடை செய்தான்; மேலும், எதிர்காலத்தில் இவர்கள் எந்த திட்டத்திலும், எந்தப் போரிலும் பங்கேற்கக் கூடாது என்று கட்டுப்பாடும் விதித்தான்.

**தபூக் போரில் பின்தங்கியவர்கள் நான்கு வகையினராக இருந்தனர்**.

**முதல் வகையினர்**, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க ஏதேனும் கடமையை நிறைவேற்றுவதற்காகப் பின்தங்கிய பாக்கியசாலிகள். உதாரணமாக, ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் இப்னு உம்மு மக்தூம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) போன்றோர்.

**இரண்டாம் வகையினர்**, உடல் ஊனமுற்றவர்கள், நோயாளிகள், பலவீனமானவர்கள் அல்லது மிகவும் ஏழ்மையானவர்கள்; வாகனம் போன்ற வசதிகள் இல்லாதவர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களைக் குறித்து, 'இவர்கள் ஒவ்வோர் இடத்திலும் நம்முடனேயே இருந்தார்கள்' என்று கூறினார்கள்.

**மூன்றாம் வகையினர்**, முனாஃபிக்கள். இவர்களது நடத்தை கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆனில் நிரந்தரமாக இவர்களைப் பற்றி கோபம், கடும் தண்டனை மற்றும் எச்சரிக்கை குறித்த கட்டளை இறக்கப்பட்டது.

**நான்காம் வகையினர்**, வெறும் சோம்பேறித்தனத்தின் காரணமாகப் போரில் கலந்து கொள்ளாமல் பின்தங்கியவர்கள். இவர்களில் குறிப்பாக மூன்று சஹாபிகள் குறிப்பிடத்தக்கவர்கள்; ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி), ஹஸ்ரத் முராரா பின் ரபீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹிலால் பின் உமைய்யா (ரலி). இந்த மூன்று சஹாபிகளைக் குறித்து திருக்குர்ஆனில்,

وَّعَلَى الثَّلٰثَةِ الَّذِيْنَ خُلِّفُوْا ؕ

(பின்தங்கிய அந்த மூன்று நபர்கள்) என்று தொடங்கும் வசனமும் இறங்கியது. **'பின்தங்கிய அந்த மூன்று நபர்கள்' என்று குறிப்பிடப்பட்டவர்களின் சம்பவ விவரம் இவ்வாறு வருகிறது. புகாரியின் ஓர் அறிவிப்பில், ஹஸ்ரத் கஅப் பின் மாலிக் (ரலி) அவர்களே இந்த முழு சம்பவத்தையும் எடுத்துரைத்துள்ளார்கள்.**

அவர்கள் கூறுகிறார்கள்: "ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்கள்; அன்னாரோடு முஸ்லிம்களும் ஆயத்தமானார்கள். எனக்கும் உறுதியான எண்ணம் இருந்தது. ஆனால், சோம்பேறித்தனம் காரணமாக ஆயத்தமாகவில்லை. நான் சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டே இருந்தேன். எந்தளவிற்கென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் காலையில் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். ஆனால் நான் எனது பயண ஏற்பாடுகளில் எதையும் செய்து முடித்திருக்கவில்லை. அன்னார் சென்றிருந்தாலும் ஓரிரு நாட்களில் ஆயத்தமாகி அன்னாரைச் சென்றடைந்து விடுவேன் என்று நினைத்தேன். இதே நிலை நீடித்தது; படை வேகமாகப் பயணித்து வெகுதூரம் சென்றுவிட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்ற பிறகு நான் வெளியே மக்களிடையே நடமாடும்போது, எனக்கு மிகவும் கவலையாக இருக்கும்; ஏனெனில், நயவஞ்சகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அல்லது அல்லாஹ்வினால் மன்னிக்கப்பட்ட பலவீனமானவர்களைத் தவிர வேறு யாரையும் நான் காணவில்லை. அன்னார் திரும்பி வருகிறார்கள் என்ற செய்தி கிடைத்ததும் எனக்குக் கவலை ஏற்பட்டது. நாளை அன்னாரின் கோபத்திலிருந்து தப்பிக்க என்ன பொய்யான காரணத்தைச் சொல்லலாம் என்று யோசிக்கத் தொடங்கினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்துவிட்டார்கள் என்று கூறப்பட்டதும் என் மனதிலிருந்த பொய்யான எண்ணங்கள் அனைத்தும் மறைந்துவிட்டன. பொய்யைச் சொல்லி அன்னாரின்

கோபத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்தேன். எனவே, அன்னாரிடம் உண்மையைச் சொல்லத் தீர்மானித்தேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்து சேர்ந்ததும் பின்தங்கியவர்கள் அன்னாரிடம் வந்து சாக்குப்போக்குகளைக் கூறவும், சத்தியம் செய்யவும் தொடங்கினார்கள். இவ்வாறான மக்கள் எண்பதுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் இருந்தனர்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களின் வெளிப்படையான காரணங்களை ஏற்றுக்கொண்டு அவர்களிடம் பைஅத் வாங்கினார்கள்.

பிறகு, நான் அன்னாரிடம் சென்றேன். நான் ஸலாம் கூறியபோது, கோபத்திலிருப்பவர் புன்னகைப்பதைப் போல அன்னார் புன்னகைத்தார்கள். 'உம்மைத் தடுத்தது எது? நீர் வாகனம் வாங்கவில்லையா?' என்று கேட்டார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களைத் தவிர உலகத்தில் வேறு எவரிடமாவது நான் அமர்ந்திருந்தால், ஏதேனும் காரணத்தைக் கூறி அவரது கோபத்திலிருந்து தப்பித்திருப்பேன் என்று நான் உறுதியாக நம்புகிறேன். எனக்குப் பேச்சுத் திறமை உள்ளது. ஆனால், அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று நான் தங்களிடம் ஏதேனும் பொய்யைச் சொல்லித் தங்களைத் திருப்திப்படுத்தினாலும், விரைவில் அல்லாஹ் தங்களை என் மீது கோபமடையச் செய்துவிடுவான் என்பதை நான் நன்கு அறிவேன். நான் தங்களிடம் உண்மையைச் சொன்னால், அதனால் நீங்கள் என் மீது கோபமடைவீர்கள்; ஆனால், அதில் அல்லாஹ்வின் மன்னிப்பை நான் எதிர்பார்க்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களிடமிருந்து நான் பின்தங்கிய அந்த நேரத்தில் இருந்ததைப் போன்று உடல் வலிமையுடனும் வசதியுடனும் நான் எப்போதும் இருந்ததில்லை."

இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'இவர் உண்மையைச் சொன்னார். எழுந்து செல்! அல்லாஹ் உம்மைக் குறித்துத் தீர்ப்பளிக்கும் வரை காத்திரு' என்று கூறினார்கள்.

“என்னைத் தவிர முராரா பின் ரபீ அம்ரீ மற்றும் ஹிலால் பின் உமைய்யா ஆகியோரும் நான் சொன்னதையே சொன்னார்கள். எனக்குக் கிடைத்த பதிலே அவர்களுக்கும் கிடைத்தது.”

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "இதற்கிடையில் ஃகஸ்ஸான் மன்னன் அனுப்பிய ஒரு கடிதம் எனக்குக் கிடைத்தது. அதில், 'உமது தோழர் உம்மிடம் கடுமையாக நடந்துகொண்டு உம்மை ஒதுக்கி வைத்துவிட்டார் என்ற செய்தி எமக்குக் கிடைத்தது. இழிவுள்ள இடத்திலோ அல்லது வீணாக்கப்படும் இடத்திலோ அல்லாஹ் உம்மைப் படைக்கவில்லை. எம்மிடம் வாரும்; நாம் உம்மை உபசரிப்போம்' என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்ததும், இது மற்றொரு சோதனை என்று நான் கருதிக் கொண்டேன். நான் அந்தக் கடிதத்தை எரிந்து கொண்டிருந்த அடுப்பு ஒன்றில் எறிந்துவிட்டேன்.

ஐம்பது இரவுகளில் நாற்பது இரவுகள் கடந்த நிலையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுவர் என்னிடம் வருவதைக் கண்டேன். 'உமது மனைவியை விட்டு விலகி இருக்குமாறு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கட்டளையிடுகிறார்கள்' என்று அவர் கூறினார். 'நான் அவளுக்கு தலாக் கொடுக்க வேண்டுமா அல்லது என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டேன். 'அவளை விட்டு விலகி இரு; அவளை நெருங்காதே' என்று அவர் கூறினார்.

எனது இரண்டு தோழர்களுக்கும் அன்னார் இவ்வாறே செய்தி அனுப்பியிருந்தார்கள். ஐம்பதாவது இரவு கழிந்து அடுத்த நாள் காலையில் ஃபஜ்ர் தொழுதுவிட்டு எனது வீடுகளில் ஒன்றின் மாடியில் அமர்ந்திருந்தேன். அல்லாஹ் விவரித்த அந்த நிலையிலேயே நான் இருந்தேன்; அதாவது, என் உயிர் எனக்கு நெருக்கடியாகவும், பூமி விசாலமாக இருந்தும் குறுகியதாகவும் இருந்தது.

அப்போது, 'கஅப் பின் மாலிக்கே! 'உமக்கு நற்செய்தி' என்று குரல் கொடுக்கும் ஒருவரின் குரலை நான் கேட்டேன். இதைக் கேட்டதும் நான் சஜ்தாவில் விழுந்தேன்; துன்பம் நீங்கிவிட்டது என்பதைப் புரிந்துகொண்டேன். இதைக் கேட்டு மக்கள் அனைவரும் எங்களுக்கு நற்செய்தி சொல்லத் தொடங்கினார்கள்."

ஹஸ்ரத் கஅப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் பள்ளிவாசலுக்குச் சென்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொன்னபோது, அன்னாரின் முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. 'உம் தாய் உம்மைப் பெற்றெடுத்த நாளிலிருந்து இன்று வரை உமக்குக் கிடைத்த நாட்களிலேயே மிகச் சிறந்த நாளிது; நற்செய்தி பெறுவீராக!' என்று கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதரே! இது தங்களின் சார்பாகவா அல்லது அல்லாஹ்வின் சார்பாகவா?' என்று நான் கேட்டேன். 'அல்லாஹ்வின் சார்பாக!' என்று அன்னார் கூறினார்கள்."

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* "ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தம் தொணியில் எடுத்துரைத்த இதன் மீதமுள்ள பகுதிகளை வரும் காலத்தில் எடுத்துக் கூறுவேன் இன்ஷா அல்லாஹ்!

*இறுதியில், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், ஜமாஅத்தின் முரப்பியாகிய மதிப்பிற்குரிய ஹாஃபிஸ் முஹம்மது இப்ராஹீம் ஆபித் சாஹிப், லைபீரியாவின் ஜமாஅத் முஅல்லிம் மதிப்பிற்குரிய ஷேக் அபூபக்ர் ஜார்ஜ் சாஹிப் மற்றும் லைபீரியாவைச் சேர்ந்த டாக்டர் ஃபஸ்ல் மஹ்மூத் சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய சமீனா சாஹிபா ஆகியோரின் நற்குறிப்புகளை எடுத்துரைத்தார்கள்; அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகை நடத்தப்படும் என்று அறிவித்தார்கள். மேலும், மர்ஹூம்களின் பாவமன்னிப்பிற்காகவும், உயர் பதவிகளுக்காகவும் துஆச் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي
الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)